# ஸ்ரீ குறிஞ்சி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

## அழகப்பசமுத்திரம்

## காலாண்டு பொதுத்தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு - தமிழ்

மதிப்பெண்கள்: 90

நேரம்: 3:00 மணி

பதிவு எண்:

பகுதி - I (மதிப்பெண்கள்:14) 14 X 1 = 14

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**ii)கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. "கபாட புரங்களைக் காவுகொண்டபின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்.
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது.

3. "நல்ல" என்ற அடைமொழி பெற்ற நூல் எது?
அ) குறுந்தொகை ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) நற்றிணை

4. சின்னச் சீறா என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) சீதக்காதி ஆ) உமறுப்புலவர் இ)பனி அகமது மரைக்காயர் ஈ) அபுல்காசிம்

5. வாடிவாசல் எனும் புதினத்தின் ஆசிரியர்?
அ) செல்லப்பா ஆ) அண்ணாமலையார் இ) இளம்பெருவழுதி ஈ) ஜெயமோகன்

6. மலை என்ற திராவிட மொழிச்சொல் சமஸ்கிருதத்தில் எவ்வாறு கூறப்படுகிறது.
அ) மல ஆ) மலா இ) மலய ஈ) மலே

7. 'Ethinic Group' கலைச்சொல் தருக.
அ) இனக்குழு ஆ) முன்னொட்டு இ) பின்னொட்டு ஈ) புவிச்சூழல்

8. ஜெயமோகனின் நாவல் எது?
அ) அறம் ஆ) விஷ்ணுபுரம் இ) நெரிக்கட்டு ஈ) தகப்பன்கொடி

9. மொழிக்கு முதலில் வராத எழுத்து எது?
அ) ஆயுத எழுத்து ஆ) சார்பெழுத்து இ) உயிர் ஈ) உயிர்மெய்

10. கருங்கடல் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.
அ) ஈறுபோதல் தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல் இனமிகல்
இ) ஈறுபோதல் ஆதிநீடல் ஈ) ஈறுபோதல் இணையவும்

11. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ)பகுதி,விகுதி,சந்தி ஆ) பகுதி,இடைநிலை,சாரியை இ) பகுதி,சந்தி,விகாரம் ஈ) பகுதி,விகுதி

Prepared By: S.Sakthivel M.A.,B.Ed.,M.Phil.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ------------------

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

(i) அ - மட்டும் சரி (ii) ஆ - மட்டும் சரி (iii) இரண்டும் சரி (iv) அ - தவறு, ஆ - சரி

13. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ------- என்பதாகும்.

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

14. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு --------------

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

**பகுதி - II (மதிப்பெண்கள்:24)**

**பிரிவு-1**

**எவையேனும் மூன்றனுக்கு வினாக்களுக்கு விடையளிக்க.** **3 X 2 = 6**

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக

18. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

**பிரிவு -2**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 X 2 = 4**

19. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21. “கோட்டை” என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 X 2 =14**

22. **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.** வாடகை, மாதம், போலீஸ், நிச்சயம்.

23. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.** கனை, கணை

24. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

25. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.** வைகை

26. **கொழுஞ்சோறு** - புணர்ச்சி விதி கூறுக.

27. உவமை, உருவகம் - வேறுபடுத்துக.

28. வேர்ச்சொல்லை தொடர்களாக மாற்றுக. **ஓடு , பாடு**

29. **அலர்ந்து** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

30. **விடைக்கேற்ற வினா அமைக்க.**

உவமை வினை, பயன், வடிவம், உரு என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - III (மதிப்பெண்கள்:28)

### பிரிவு-1

**எவையேனும் இரண்டனுக்கு வினாக்களுக்கு விடையளிக்க. 2 X 4 = 8**
**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது; இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.
33. "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

### பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2 X 4 = 8**

35. "என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
38. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

### பிரிவு-3

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. 3 X 4 = 12**

39. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

உவமை அணியை விளக்குக.

40. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**(அல்லது)**

ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

41. **மையக்கருத்தை கூறி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக.**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர் - பாரதியார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42. **தமிழாக்கம் தருக.**

1. Education is the most powerful weapon, which you can use to change the world.
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
3. Culture does not make people. People make culture.
4. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

**பகுதி - IV (மதிப்பெண்கள்:18)**

**அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க. 3 X 6 = 18**

43. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

44. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

45. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**பகுதி - V (மதிப்பெண்கள்:6)**

**அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6**

46. அ) 'அம்ம வாழி' - எனத் தொடங்கும் குறுந்தொகை பாடலை எழுதுக.

ஆ) 'பொருட்டு' என முடியும் குறளை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com